## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து

# அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சி ஆதரவு!

## ஜெ.குரு பாட்டாளி மக்கள் கட்சி – தமிழ் மாநில தேசிய லீக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்தன!





சென்னை, ஏப். 10 -

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (09.04.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், வன்னியர் கூட்டமைப்பின் தலைவரும் அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சியின் நிறுவனத் தலைவருமான சி.என்.இராம மூர்த்தி அவர்களும் துணைத் தலைவர் கே.வெங்கடேசன், பொதுச் செயலாளர் ஜோசப்ராஜ் ஆகியோர் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், அனைத்து தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சி நிர்வாகிகள், தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தார்.

### ஜெ.குரு பாட்டாளி மக்கள் கட்சி ஆதரவு!

முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (09.04.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், வன்னியர் சங்கத் தலைவர் காடுவெட்டி ஜெ.குரு அவர்களின் மகள் குரு. விருதாம்பிகை மற்றும் குரு. விருதாம்பிகையின் கணவரும் ஜெ.குரு அவர்களின் மருமகனுமான காடுவெட்டி மனோஜ், பொருளாளர் ஆர்.பாலமுருகன், இணைச் செயலாளர் குடியாத்தம் பிரேம்குமார் ஆகியோர் நேரில் சந்தித்து, "ஜெ.குரு பாட்டாளி மக்கள் கட்சி" நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஜெ.குரு பாட்டாளி மக்கள் கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், அனைத்து தொகுதிகளிலும் தி.மு.க.



தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு ஜெ.குரு பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகிகள், தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தனர்.

### 'தமிழ் மாநில தேசிய லீக்' கட்சி ஆதரவு!

முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (09.04.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், 'தமிழ் மாநில தேசிய லீக்' கட்சியின் பொதுச்செயலாளர் திருப்பூர் அல்தாப் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகளான மாநில அமைப்புச் செயலாளர் சம்சுதீன், சென்னை மாவட்டச் செயலாளர் கே.அல்லாபகஷ், தென்சென்னை மாவட்டச் செயலாளர் திருவான்மியூர் எம்.ஹாஜா, இளைஞர் அணிச் செயலாளர் திருவான்மியூர் ரிஸ்வான் ஆகியோர் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு 'தமிழ் மாநில தேசிய லீக்' கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், அனைத்து தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு பிரச்சாரம் செய்வதோடு, அவர்களின் வெற்றிக்கு 'தமிழ் மாநில தேசிய லீக்' கட்சி நிர்வாகிகள் தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தனர்.

இந்நிகழ்வுகளில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

---

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து – நாளை

# திருப்பத்தூரில் கழகத் தலைவர் - முதல்வர் தேர்தல் பிரச்சாரம்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

*சிவகங்கை, ஏப். 10 -*

*வருகிற 23ஆம் தேதி தமிழக சட்டமன்றத் தேர்தல் நடைபெறுகிறது. மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மாவட்டம் வாரியாக மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணித் தலைவர், கழகத் தலைவர், முதல்வர் தளபதி அவர்கள் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டங்களில் பங்கேற்று தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.*

*அதன் தொடர்ச்சியாக நாளை 11ஆம் தேதி - சனிக்கிழமை சிவகங்கை மாவட்டத்தில் தழகத் தலைவர் - முதல்வர் தளபதி அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.*

*இது குறித்து அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது. நாளை 11ம் தேதி மாலை 6.00 மணி அளவில் கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் சிவகங்கை மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து திருப்பத்தூர் வைரவன்பட்டியில் வேட்பாளர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் திருப்பத்தூர், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., மானாமதுரை, நடிகர் கருணாஸ் சிவகங்கை, எஸ். மாங்குடி, காரைக்குடி ஆகியோரை ஆதரித்து நடைபெற உள்ள பொதுக்கூட்டத்தில் சிறப்புரைஆற்றுகிறார்.*

*எனவே இந்த பொதுக் கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கழக நிர்வாகிகள், ஒன்றிய நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.*



திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டச் செயலாளரும், வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., சங்கராபுரம் வடக்கு ஒன்றியம், வடபொன்பரப்பி, வட கீரனூர், மேல் சிறுவள்ளூர், மணலூர், பவுஞ்சிப்பட்டு, பிரம்மகுண்டம் ஆகிய ஊராட்சியில் பொதுமக்களை வீடு வீடாக நேரில் சந்தித்து, திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். இதில் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டனர்.

---

## அ.தி.மு.க. முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர்

# அழகு சுப்பையா உள்ளிட்ட 1000 பேர் தி.மு.க.வில் இணைந்தனர்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில்!

புதுக்கோட்டை, ஏப்.10–

புதுக்கோட்டை தெற்கு.மாவட்டம் பொன்னமராவதியில் அ.தி.மு.க.வில் இருந்து விலகிய முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர் அழகு சுப்பையா தனது ஆதரவாளர்களுடன் அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

பொன்னமராவதி தி.மு.க. கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாற்றுக் கட்சிகளிலிருந்து தி.மு.க.வில் இணையும் நிகழ்வு புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில் தி.மு.க. தெற்கு ஒன்றியச் செயலாளர் அ.அடைக்கலமணி, தி.மு.க. நகரச் செயலாளர் அ.அழகப்பன் ஆகியோர் ஏற்பாட்டில் பொன்னமராவதி முன்னாள் அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் மற்றும் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் அழகு சுப்பையா தமது ஆதரவாளர்கள் 1000 பேருடன் அ.தி.மு.க. உள்ளிட்ட மாற்றுக்கட்சிகளிலிருந்து விலகி இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில் இணைந்தனர்.

தி.மு.க.வில் இணைந்தவர்களுக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி கருப்பு சிவப்பு துண்டு அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடக்கு ஒன்றியச் செயலாளர் அ.முத்து, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.ஜெயராமன், மாவட்டப் பிரதிநிதி சிக்கந்தர், மாவட்ட விவசாய அணி நிர்வாகி ஆலவயல் மிராஸ் பெரி.அழகப்பன் அம்பலம், வெங்கடேஷ், சீமாட்டி லத்தீப், வேந்தன்பட்டி அப்துல், இளைஞரணி துணைஅமைப்பாளர் இளையராஜா, சுந்தரி ராமையா, ஆலவயல் முரளி சுப்பையா, மணப்பட்டி பழனிச்சாமி, இடையாத்தூர் பாண்டியன், முருகேசன், சுரேஷ், கிரிதரன், பழனியப்பன், சோலையப்பன், திமுக மூத்த முன்னோடிகள், நகர, கிளைக் கழக நிர்வாகிகள், முன்னாள் நகரச் செயலாளர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, தகவல் தொழில்நுட்ப அணியினர் மற்றும் கூட்டணிக் கட்சியினர் என பலர் பங்கேற்று தி.மு.க.வில் இணைந்தவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

---

## ஒழுங்கு நடவடிக்கை!

### தலைமைக் கழக அறிவிப்பு!

கோவை வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018
நாள் : 9.4.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

## ஒழுங்கு நடவடிக்கை!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தூத்துக்குடி தெற்கு மாவட்டம், திருவைகுண்டம் கிழக்கு ஒன்றியம், ஏரல் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் ரா. பெரியசாமி கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018
நாள் : 9.4.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

## சென்னை வடகிழக்கு மாவட்டம்

### திருவொற்றியூர் மேற்கு பகுதி 4வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் மேற்கு பகுதி 4வது வட்டக் கழகச் செயலாளர் க.பவுல் அவர்களுக்குப் பதிலாக, திரு. **ந. ராம்குமார்** (6/49, மாகாளியம்மன் கோயில் தெரு, எர்ணாவூர், சென்னை - 600057) அவர்கள் திருவொற்றியூர் மேற்கு பகுதி 4வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018
நாள் : 9.4.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---



நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. மருங்கூர் ஊராட்சி கீழக்கொல்லை கிராமத்தில் பிரச்சாரத்தை தொடங்கி தோப்பு கொல்லை, கீழக்குப்பம், நடுக்குப்பம் மேட்டுக்குப்பம்,மேலிருப்பு, முத்தாண்டி குப்பம் உள்ளிட்ட இருபதுக்கு மேற்பட்ட கிராமங்களில் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்குச் சேகரித்தார். கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.